உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

" குருப்புக்ழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."

மலர் 5. Vol 5.
விக்கிரம வருஷ ஆடி மீ 1உ
ஜுலை மீ -1940
இதழ் 4 No 4

திருப்புகழ்

திருவேரகம் (சுவாமி மலை)

எந்தத் திகையினு மலையினு முவரியி
னேந்தப் படியினு முகடினு முளபல
யெந்தச் சடலமு முயிரிபை பிறவியி னுழலாதே

இந்தச் சடமுட னுயிர்நிலை பெறநளி
னம்பொற் கழலிணை களில்மரு மலர்கொடு
என்சித் தமுமன முருகிநல் சுருதியின் முறையோடே

சந்தித் தரஹர சிவசிவ சரணென
கும்பிட் டிணையடி யவையென தலைமிசை
தங்ககப் புளகித மேழஇரு விழிபுனல் குதிபாயச்

சம்பைக் கொடியிடை விபுதையி னழகுமு
னந்தத் திருநட மிடுசர ணழகுறச்
சந்தச் சபைதனி லெனதுள முருகவும் வருவாயே

தோந்தத் திகுகுட தகுதுட டிமிடிமி
தந்தத் தனதன டுடுடு டமடம
துங்கத் திசைமலை யுவரியு மறுகச லரிபேரி

துன்றச் சிலைமணி கலகல கலினென
சிந்தச் சுரர்மல ரயன்மறை புகழ்தர
துன்புற் றவுணர்கள் நமனுல குறவிடு மயில்வேலா

கந்தச் சடைமுடி கனல்வடி வடலணி
யெந்தைக் குயிரெனு மலைமகள் மரகத
கந்தப் பரிமள தனகிரி யுமையரு ளிளையோனே

கஞ்சப் பதமிவர் திருமகள் குலமகள்
அம்பொற் கொடியிடை புணரரி மருகநல்
கந்தப் பொழில்திகழ் குருமலை மருவிய பெருமாளே.

பதவுரை.

சலரி - சல்லரி என்ற வாத்தியங்களும், பேரி - பேரிகைகளும், தொந்தத் திகுகுட தகுகுட டிமிடிமி தந்தத் தனதன டுடுடுடு டமடம - ,(என்ற ஒலிக் குறிப்புடன்) துங்க திசை மலை - தூய்மையான எட்டுத் திசைகளிலு முள்ள குல மலைகளும், உவரியும் - கடலும், மறுக - பேரிரைச்சலினால் துன்புறு மாறு, துன்ற - நெருங்கி ஒலிக்கவும், சிலை மணி - வில்லுகளிற் கட்டியுள்ள மணிகள், கலகல கலின்என - கலகல என்று ஒலிக்கவும், சுரர் மலர் சிந்த - தேவர்கள் (கற்பக) மலர்களைப் பொழியவும், அயன் - பிரமதேவரும், மறை - வேதங்களும், புகழ்தர - வியந்து புகழ்ந்து துதிசெய்யவும், அவுணர்கள் துன் புற்று - இராக்கதர்கள் மிகவும் துன்பத்தை யடைந்து, நமன் உலகு உற விடும் - இயமனுடைய நரகலோகத்தை யடையவும் விட்டருளிய, அயில் வேலா - கூர்மைபொருந்திய வேற்படையை யுடையவரே! கந்த சடை முடி - பரிமளமிக்க சடாமகுடத்தை யுடையவரும், கனல்வடிவு - நெருப்பனைய திரு மேனியை யுடையவரும், அடல் அணி - போராற்றலும் பேரழகுடையவரும்’ எந்தை - அடியேனுடைய தந்தையாருமாகிய சிவபெருமானுக்கு, உயிர்எனும் ஆவியைப் போன்றவரும், மலைமகள் - மலையரசன் திருமகளாரும், மரகத - மரகத வண்ணரும், கந்த பரிமள தனகிரி - மிகுந்த வாசனை தங்கிய மலை போன்ற பயோதரங்களை யுடையவரும் ஆகிய, உமை அருள் - உமாதேவியார் பெற்றருளிய, இளையோனே - இளம் பூரணரே! கஞ்ச பதம்இவர் - தாமரை யாகிய திருமாளிகையில் வீற்றிருக்கின்ற, திரு மகள் - இலக்குமி தேவியையும், குலமகள் - பூதேவியையும் அம் பொன் கொடி இடை - அழகிய பொற்கொடி போன்ற மெல்லிடை யுடைய நீளா தேவியையும், புணர் அரி மருக - மருவுகின்ற திருமாலின் மருகரே! நல் கந்த பொழில் திகழ் - நல்ல வாசனை கமழும் மலர்ச் சோலைகள் சூழ விளங்கு

கின்ற, குருமலை மருவிய - சுவாமிமலை யென்னுந் திருவேரகத்தில் எழுந்தருளியுள்ள, பெருமாளே - பெருமையின் மிக்கவரே! எந்த திசையினும் - திசைகள் எல்லாவற்றிலும், மலையினும் - மலைகளிலும், உவரியின் - கடலிலும், எந்த படியினும் - எல்லா வுலகங்களிலும், முகடினும் - வான உச்சியிலுள்ள அண்டங்களிலும், உள - இருந்து வாழ்கின்ற, பல எந்த சடலமும் - பற் பல விதமான யோனிபேதங்களாலாகிய எல்லா உடல்களையும் எடுத்து, உயிர் இயை பிறவியின் - உயிருடன் கூடிய பிறவிக் கடலிற் புகுந்து; உழலாதே - சுழற்சியை யடையா வண்ணம், இந்த சடமுடன் - இப்போது எடுத்துள்ள இந்த உடம்புடனேயே, உயிர் நிலை பெற - மீண்டும் பிறவாமல் அடியேனுடைய ஆன்மாவானது (தேவரீருடன் அத்துவிதமாகக் கலந்து) நிலைபெறடையவும், நளினம் பொன்கழல் இணைகளில் - தாமரை மலர்போன்ற பொற்பிரகாசம் பெற்ற தேவரீருடைய இரண்டு திருவடிகளிலும், நறுமலர் கொடு - வாசனைதங்கிய பூக்களைக்கொண்டு, என் சித்தமும் - அடியேனுடைய சித்தமும், மனம் - மனமும், உருகி - நீராயுருகி, சுருதியின் முறையோடு (ஏ-அசை) சந்தித்து - வேத நூல்களிற் கூறிய விதிப்படி தேவரீரைக் கலந்து, அரஹர சிவசிவ சரண் என - ஹரஹர சிவசிவ நினக்கேயபயம் என்று துதித்து, கும்பிட்டு - தொழுது, இணை அடி அவை - தேவரீருடைய இரண்டு திருவடிகளும், என தலை மிசை தங்க - அடியேனுடைய சென்னிமேல் தங்கவும், புளகிதம் எழ - உடம்பு பூரிக்கவும், இருவிழி புனல் குதிபாய - இரண்டு கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் (மலையருவிபோல்) குதித்துப் பெருகவும், சம்பை கொடி இடை - சம்பைக் கொடிபோன்ற மெல்லிய இடையுடைய, விபுதையின் அழகு முன் - உமாதேவியாருடைய அழகிய திருமுன், அந்த திருநடம் இடு சரண் அழகு உற - அழகிய தெய்வீகத் தாண்டவஞ் செய்யும் சரணாரவிந்தம் அழகு செய்ய, எனது உளம் உருகவும் - அடியேனுடைய உள்ளம் உமது பேருட்பெருக்கை யுன்னி உருகுமாறும், சந்த சபைதனில் வருவாயே - அழகிய இச்சபையின்கண் தேவரீர் வந்தருள் புரிவீர்.

பொழிப்புரை.

சல்லரி பேரிகை முதலிய வாத்தியங்கள், தொந்தத் திகுகுட தகுகுட டிமிடிமி தந்தத் தனதன டுடுடு டமடம என்ற ஒலியுடன், தூய எட்டுக் குலாசலங்களும் கடல்களும் அப்பேரிரச்சலினால் துன்புறுமாறு நெருங்கி ஒலிக்கவும், விற்களிற் கட்டிய மணிகள் கலகல கல வென்று ஒலி செய்யவும், தேவர்கள் கற்பக மலர் மாரி பெய்யவும், பிரமதேவரும் வேதங்களும் வியந்து துதி செய்யவும், அசுரர்கள் துன்புற்று இயமனுடைய நரகவுலகம் சேரவும்

விடுத்தருளிய கூரிய வேலாயுதக் கடவுளே! பரிமள மிக்க சடைமுடியை யுடையவரும், செந்தீ வண்ணரும், போராற்றலும் பேரழகுடையவரும் அடியேனுடைய பிதாவும் ஆகிய சிவபெருமானுக்கு உயிர் போன்றவரும், மலைமன்னன் திருமகளாரும், மரகத மேனியை யுடையவரும், மிகுந்த வாசனைதங்கிய மலையனைய திருமுலைகளை யுடையவருமாகிய உமைபம்மையார் பெற்றருளிய திருப்புதல்வரே! தாமரை வீட்டில் வீற்றிருக்கின்ற சிதேவியையும் பூதேவியையும் அழகிய பொற்கொடிபோல் துவளுகின்ற மெல்லிய இடையை யுடைய நீளாதேவியையும் மருவுகின்றநாராயண மூர்த்தியின் திருமருகரே! நல்லபரிமள மிக்க மலர்ச் சோலைகள் சூழ்ந்துள்ள சுவாமிமலையின்மீது எழுந்தருளியுள்ள பெருமித முடையவரே! எல்லாத் திசைகளிலும், மலைகளிலும், கடல்களிலும், எல்லா உலகங்களிலும், வானமுகட்டிலுள்ள அண்டங்களிலும் இருந்து வாழ்கின்ற நானுவகையான யோனிபேதங்கள் எல்லாவற்றிலும் அந்தந்த உடம்புகளை எடுத்துப் பிறந்து பிறந்து உழலாவண்ணம், எடுத்த இப்பிறப்புடன் முடிவடைந்து மீட்டிங்கு பிறவாமல் தேவரீருடன் அத்துவிதமுற்று உயிர் நிலைபேறு அடையவும், தேவரீருடைய தாமரைமலர் போன்ற இரண்டு பொன்னடிகளிலும் வாசனை தங்கிய மலர்களைக் கொண்டு, அடியேனுடைய சித்தமும் மனமும் நீராயுருகவும், நல்ல வேதங்களிற் கூறிய முறைப்படி தேவரீரைச் சந்தித்து, ஹரஹர சிவசிவ உமக்கே சரணம் என்று கூறி வணங்கவும், தேவரீருடைய இரண்டு சரணாரவிந்தங்கள் அடியேனுடைய சென்னிமேல் தங்கவும், உடல் புளகிக்கவும், இரண்டு கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் மலைபருவிபோல் குதித்தோடவும், சம்பைக் கொடிபோன்ற மெல்லிய இடையை யுடைய உமைபம்மையாரது அழகிய திருமுன்னர், அழகிய திருநடம்புரியும் திருவடி அழகு செய்யவும், எளியேன் முன்வரும் உமது திருவருளின் பெருக்கை பெண்ணி) அடியேனுடைய உள்ளம் உருகவும், அழகிய இச்சபையில் வந்து அருள் புரிவீர்.

(!*!)

விரிவுரை.

எந்தத்திகையினு......உழலாதே:—

எண்ணிலாத நெடுங்காலமாக எண்ணிலாத பிறவி எடுத்து எடுத்து வருவதால், நாம் பிறவாத இடமில்லை; பிறவாத ஜாதியில்லை; பேசாத மொழியில்லை;

"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பரவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்"
—திருவாசகம்

இந்தச் சடமுட னுயிர் நிலைபெற:—

முருகப் பெருமானை வழிபடுவோர் மீணடும் பிறவாத நிலை பெறுவர்; ஆன்மா நிலை பேறடையும்.

சந்தச் சபைதனில்:—

பிரபுட தேவனிடம், சம்பந்தாண்டான் வாதம் நிகழ்ந்துழி தாம் கொடுத்த வாக்குறுதியின்படி, அருணகிரிநாதர் அரசன் முதலியோர் குழுமியுள்ள மாப்பேரவையில் முருகவேளை வரவழைக்கும் பொருட்டு இப் பாடல் பாடப் பெற்றது.

எனதுள முருகவும்:—

மாலயனாதி வானவர்கட்கு அரிய பரம்பொருளாகிய முருகவேள் வலிதில் மயில்மிசை வந்து காட்சிவழங்கும் பேருட்டிறத்தை நினைந்து உள்ளம் உருகுவது.

அயில்வேலா......இளையோனே:—

அயில் வேலா! இளையோனே! என்றதனால் பகைவரை யழிக்கும் ஞானசத்தி வேலுடன், குழவிப் பருவத்துடன்வந்து காட்சி தரவேண்டு மென்பது குறிப்பு.

அரி மருக:—

காத்தற் றொழிலை யுடைய திருமால் மருக! என்றதனால்; காக்கும் பொருட்டு இங்கு வந்தருளல் வேண்டும் என்பதும் நினைதற் பாலது.

குருமலை:—

சிவபெருமானுக்குக் குகப் பெருமான் குருவாக எழுந்தருளி பிரணவோபதேசஞ் செய்த இடமாதலால், சுவாமிமலைக்குக் குரு மலை எனப் பெயர் போந்தது.

இப்பாடலில் "குதிபாய" என்ற பிரயோகம் இதுகாறும்எந்த நூலிலும், யாவராலும் கையாளப் படாத ஒரு அற்புதப் பதம். "கண்ணீர் பாயேன்" "கண்ணீர் மல்க" "கண்மாரி பெய்து" என் றெல்லாம் பிரயோகங்கள் உள. இவைகளுடன் "விழிபுனல் குதி பாய" என்பதைப் பொருத்திப் பார்த்து அதன்பொருளாழத்தை உன்னிமகிழ்க.

கருத்துரை.

அசுர சம்மாரஞ் செய்த வேலாயுதரே! உமா சுதரே! மால்மருகரே! சுவாமிமலைக் குமரரே! பிறவி யலை யாற்றிற்புக்கு அலையா வண்ணமும் தேவரீரை வழிபட்டு உய்யும் பொருட்டு, இந்தச் சபையில் வந் தருள் புரிவீர்.

ஓம்குஹாய நம:

கந்தரலங்காரம்

(58வது - பக்கத் தொடர்ச்சி.)

வேதா கமசித்ர வேலா யுதன்வெட்சி பூத்ததண்டை
பாதார விந்த மரணாக வல்லும் பகலுமில்லாச்
சூதான தற்ற வெளிக்கே யொளித்துச்சும் மாவிருக்கப்
போதா யினிமன மே!தெரி யாதொரு பூதர்க்குமே.

பதவுரை:

மனமே - ஓமனமே! வேத - வேதங்களும், ஆகம - ஆகமங்களும் துதிக்கின்ற, சித்ர - அழகிய, வேல் ஆயுதன் - வேற்படையையுடைய குமாரக் கடவுளின், வெட்சி பூத்த - வெட்சிமலர்மாலை மலர்ந்துள்ளதும், தண்டை - தண்டை யென்னும் கலனையுடையதுமாகிய, பாத அரவிந்தம் - தாமரை மலர்போன்ற திருவடிகளை, அரண் ஆக - நமக்குக் காவலாகக் கொண்டு, அல்லும் பகலும் இல்லா—மறப்பும் நினைப்பும் (கேவல சகலம்) அற்ற, சூதானது அற்ற வெளிக்கு—வஞ்சக மற்ற பரவெளியில், ஒளித்து—(உலக பசுபாச தொந்தரவு கட்கு அகப்படாமல்) மறைந்து, சும்மா இருக்க—உரையற்ற நிலையாகிய பேசா அநுபூதியில் நிலைத்து நிற்றும் பொருட்டு, இனி போதாய்—சென்ற நாள் ஒழியினும் இனியாவது வருவாயாக, ஒரு பூதர்க்கும் தெரியாது—இந்த நன்னெறி ஒருவர்க்கும் தெரியாத ஒன்றும்.

விரிவுரை.

வேதாகம:---

அறுமுக வள்ளல் அறிவு நூல்களாகிய வேதங்களாலும் ஆகமங்களாலும் பரவப்பெற்ற திருவடியை யுடையவர்.

"ஆலமுண்ட கோனகண்ட லோகமுண்ட மால்விரிஞ்சன்
ஆரணங்க ளாகமங்கள் புகழ்தாளும்"
—திருப்புகழ்

வெட்சி பூத்த.---

வெட்சி மலர் வேற்பெருமானுக்குகந்தமலர்களில் ஒன்று. அதனைப் பின்வருந் திருவாக்குகளால் உணர்க.

"செங்கால் வெட்சிச் சீறித ழிடையிடுபு"
—திருமுருகாற்றுப்படை

"வெட்சி மலர்சூழ்ந்த நின்னிரு கழற்கால்" —கல்லாடம்

"வெட்சித் தண்டைக் காலென்கிலை" —அலங்காரம்

பாதார விந்தமரண்:---

முதலவினை முடிவில் இருபிறை யெயிறு கயிறுகொடு முது வடவை விழிசுழல வரு காலதூதர்கெட முடுகுகின்ற முருகவேளுடைய முளரியந்தாள் ஆன்மாக்களுக்குக் காவலாக இருந்து உய்விக்கும் பெருங் கருணையுடையது. ஆதலால், அப்பரமபதியின் பாதகமலமே ஆன்மகோடிகட்குத் தஞ்சம் புகத்தக்கதாம். வேலனடியார்க்குக் காலபயங் கிடையாது.

அல்லும் பகலுமில்லா:---

அல்லும் பகலும் என்பது மறப்பு நினைப்பு; இதனை வடநூலார் கேவலசகல மென்பர்.

"கங்குல் பகலற நின்ற எல்லையுளதெது"
—தாயுமானர்

"இராப்பகலற்ற இடத்தே இருக்கை எளிதல்லவே"
—அலங்காரம்

"அந்திபக லற்ற விடம் அருள்வாயே"
—திருப்புகழ்.

சூதானதற்றவெளி:-

வஞ்சகமற்றார் அடையும் பரவெளி; வெளியில் என்ற ஏழாம் வேற்றுமை வெளிக்கு என நான்காம் வேற்றுமையாக மாறி நின்றது.

ஒளித்து:-

மலமாயா கன்மங்கட்கும், புறப்பகை உட்பகைவர் கட்கும் ஒளித்து இருப்பது. வெளியில் ஒளிப்பது என்பது ஒரு விநோதம். உலகில் ஒரு மறைவிடத்தில் ஒளிவது வழக்கம். வெட்ட வெளியில் ஒளிந்து கொள்வது என்பது ஒருபெரிய ஆச்சரியம்.

"அநாதியிலே வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற வெறுந்தனியை"

—அலங்காரம்

சும்மா இருக்கப் போதாய்:--

காடுங் கரையுங் கால்விட்டு ஓடும் மனக்குரங்கே! உலக விஷயத்தினின்று நீக்கி சொல்லறச் சும்மாயிருக்க வருவாயாக. சும்மாயிருத்தலினுலேயே சுகம் பெறலாம். அது அருணகிரிநாத ருக்கு, ஆறுமுகவேள் உபதேசித்ததாம்.

"சும்மாவிரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளொன்று மறிந்திலனே"

—அநுபூதி

இந்த நிலையைக் காட்டுமாறு நமது சிதம்பர சுவாமிகள் செவ் வேளை வேண்டியிரந்து நிற்கின்றனர்.

சும்மாவிரு வெனநீ சொல்லப் பொருளொன்றும்
அம்மா அறிந்திலமென் றன்றுரைத்த — எம்மான்
அருணகிரி நாதர் அநுபவம் நாயேற்குக்
கருணபுரி போரூரா காட்டு.

சும்மா இருக்குஞ் சுகத்தைப் பெற ஒவ்வொருவரும் விரைந்து முயற்சிக்க வேண்டும். பெருமானிடம் விண்ணப்பிக்க வேண்டும். குருமூர்த்தியிடம் குறையிரந்து யாசிக்க வேண்டும். அத னைப் பெறவேண்டுமென்ற தாகமும் வேகமும் இருத்தல் வேண் டும். நமது இராமலிங்க அடிகள் அதுகுறித்து வாய்மலர்ந்ததை யும் உன்னுக.

இன்றுவரு மோநாளைக் கேவருமோ அல்லது மற்
றென்று வருமோ அறியேன் எங்கோவே — துன்றுமல
வெம்மாயை யற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்குஞ் சுகம்.

தெரியாதொரு பூதர்க்குமே:--

"மதயானையை வசமாக்குதலும், கரடி வெம்புலிவாயைக் கட்டுதலும், சிங்கத்தின் முதுகின் மேலூர்தலும், அரவினையாட்டு தலும், பஞ்சலோகத்தை வேதித்தலும், ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமலிருத்தலும், தேவரை ஏவல் கொள்ளுதலும்,

இளமையோடு எந்நாளுமிருத்தலும், கூடுவிட்டுக் கூடுபாய்தலும், நீர்மேல் நடத்தலும், நெருப்பின்மேல் நிற்றலும், ஒப்பற்ற சித்தி பெறுதல் முதலிய வெல்லாம் எளிமையான செயல்களேயாம். சிந்தையை யடக்கிச் சும்மா இருக்கின்ற திறம் ஒன்றே அரிது! அரிது!! என்றார் நம் தாயுமான அடிகள். ஆதலால் வெளியில் ஒளித்துச் சும்மா யிருக்குந் திறனை ஒருவரும் உணரார்.

கருத்துரை.

ஓ மனமே! வேதாகமங்களால் துதிக்கப்படுகின்ற வேற்பெருமானுடைய வெட்சித் தண்டைத் திருவடித்தாமரையே தஞ்சமாக அடைந்து, நினைப்பு மறப்பு அற்ற பரவெளியில் ஒளித்து சும்மா இருப்பதற்கு இனியாவது வருவாய்; இது ஒருவர்க்குந் தெரியாத ஒன்றும்.

ஓம் குஹாய நம:

சிவானந்தலஹரீ

(60-வது பக்கத் தொடர்ச்சி.)

(ஆதிசங்கரர் அருளிச்செய்தது)

(64) வக்ஷஸ்தாட நமஸ்தகஸ்ய கடிநா பஸ்மார ஸம்மோ்தநம்
பூப்ருத் பர்யடநம் நமஸ்துர சிர: கோடீரஸங்கர்ஷணம்
கர்மேத ம்ருதுளஸ்ய தாவகபதம் த்வம்த்வஸ்ய கௌரீபதே
மச்சேதோ மணிபாதுகாவிஹரணம் சம்போ ஸதாம்கீ குரு

பதவுரை.

கௌரீபதே—உமாபதியே!
சம்போ—சுககாரணரே!
அந்தகஸ்ய—கூற்றுவனுடைய,
வக்ஷஸ்தாடநம்—மார்பினில் அடித்தல் (உதைத்தல்)
கடிநா பஸ்மார ஸம்மர்தநம்—கொடுமையான (நீக்குதற்கரிய) அஞ்ஞானத்தைப் போக்குவதும்,
பூர்பர்யத் பர்யடநம்—கைலேமலேயில் சஞ்சரித்தல்,
நமஸ்துரசிர: கோடீர ஸங்கர்ஷணம் — வணங்குகின்ற தேவர்களுடைய தலைகளிலிருக்கிற மகுடங்கள் உராய்தல் ஆகிற,
இதம்—இந்த நான்கையும்
ம்ருதுளஸ்ய — மிகவும் மென்மையான,
தாவக பதம் த்வஸ்ய—தேவரீருடைய திருவடிகளின் இரண்டிற்கும்,
கர்ம—வியாபாரம் (ஆதலால்)
மச்சேதோ மணிபாதுகா விஹரணம்—அடியேனுடைய மனதாகிற இரத்தின பாதரக்ஷைகளைப் பூண்டு சஞ்சரித்தலை,
ஸதா—எப்பொழுதும்
அங்கீகுரு—ஒப்புக் கொள்வீர்.

பொழிப்புரை.

உமாபதியே! சம்புவே! இயமனுடைய மார்பில் உதைத்தலேயும், அஞ்ஞானத்தை யழித்தலேயும், திருக்கைலாய மலேயில் உலாவு தலேயும், வணங்குகின்ற வானவர்களுடைய மணிமகுடங்கள் உராய்தலேயும், தொழிலாகவுடைய தேவரீருடைய மெல்லிய திருவடிகட்கு அடியேனுடைய மனமாகிய பாதரக்ஷையை ஏற்றுக் கொண்டருள்வீர்.

ஓம் குஹாய நம :

கந்தர் திருவிளையாடல்

(64-வது பக்கத்தொடர்ச்சி3)

இவ்வாறு சிங்கமுகாசுரன் கூறிய நல்லுரைகளைக் கேட்ட சூரபன்மன், கனலெனக் கனன்று, "தம்பி! காற்றில் தள்ளுண்டு நெருப்பினில் சூடுண்டு, கங்கை ஆற்றில் தாக்குண்டு, சரவணம் புக்கு அலையுண்டு, வேற்றுப் பேர் முலையுண்டு, அழுதே விளையாடும் நேற்றைப் பாலனையோ பரம் பொருளென நினைத்தாய்? பல நீர்க் குடங்களில் பிரதிபலிக்கும் சூரியனைப்போல பிரமம் ஒன்றே மாயையால் பலஉயிர்களாயிற்ற; குட முடைந்தவுடன் கடாகாசம் மகாகாசம் ஆவது போல் உடல் நீங்கிய உடன் உயிர் பிரமமாகி விடும். பிரமத்திற்கும் உயிர்க்கும் உடம்பேவேறு; பல உயிர்கள் இல்லை; வலியற்றோர்கள் தாழ்வர்; வலியுடையோர் உயர்வர்; இது உலக இயற்கை. முடிவில்லாத ஆயுளை யுடைய யான் பெரியன்; சிவகுமாரன் சிறியன்; ஆதலால், அவனை யான் எளிதில் வெற்றி பெறுவேன். நமது முன்னோர்களை யழித்த காரணத்தால் தேவர்களை யான் சிறைபிட்டேன்; குற்றஞ் செய்தாரைக் கொற்றவன் தண்டித்தல் மனுமுறையேயாம். தேவர்களுடைய சிறையையான் விடேன்; இனி தேவேந்திரனையுந் தேடிச் சிறையிடுவேன்; சிவ பெருமானே தடுத்துரைக்க வரினும் அவருடன் போர் புரிவேன்; இனி நீ இத் தீயுரையை விடுப்பாயாக. நீ என்னுடன் பிறந்தும் பகைஞரைப் பெரிதும் மதித்து அவர்கள் பாலாயினை; இனி உன்னை யன்றி வேறு பகை எனக்கு இல்லை. ஆயிரந் தலைகளையும் இரண்டாயிரந் தோள் கரங்களையும் எதற்காகப் படைத்தனை? வீரத்தையும் வலியையும் இழந்தாய்! பிச்சரினும் பேதுற்றனை. அசுரப் பண்பை இழந்தனை. ஆதலால் நீ தவஞ்செய்யச் செல்வாய். மானத்தை விட்டு மறந்தாய்; அசுருடைய புகழை யழிக்கப் பிறந்தாய்; பிறந்ததன் பயனைப் பெற்றாயில்லை. நீ இருந்தும் இறந்

தவன் போலாயினை. பகைவர்க்குப் பயப்படும் நீ பிரமதேவனைப் போல் பஞ்சாங்கஞ் சொல்லிக் கொண்டு திரிவாயாக. படைக்கலங் களை எறிந்துவிட்டுச் செல்லுதி. கள்ளி மரத்தின் கிளைகளைப் போல் பல தலைகளையும் கைகளையும் பயனின்றி வளர்த்தனை. நீண்டகாலமாக இவைகளைச் சுமந்ததனால் இளைத்தனை போலும்? இனிவலியற்ற உன்னால் யாது செய்ய முடியும்? பேடி போன் றவனே! பூதரையும் சிவ மைந்தனையும் ஏனைய பகைவரையும் யான் ஒருவனே வெல்வன்; நீ உனது ஊருக்கு எழுந்து செல் வாய்'' என்று சினந்து சொன்னான்.

இவ்விழிவுரைகளைக் கேட்ட சிங்கமுகன் ஆயிரங் கண்களி லும் அனற்பொறி சிந்த, நகைத்து, உள்ளம் அழன்று, "இவ னுடைய அறிவு நன்று'' என்று தன்னுளத்தில் கீழ்வருமாறு நினைப்பானாயினான். தேன்மழை பொழிபச் செய்து கற்கண்டெரு விடினும் எட்டி மரம் கைப்பு மாறாது; அதுபோல் அறிவில்லாத கீழ் மக்களைச் சீர்திருத்த எண்ணுவதும் பயனற்றதேயாம். அள வற்ற ஆக்கத்தை யுடைய சூரபன்மன் புத்தியைத் தெருட்டியும் உய்யும் வகையை நினைக்கின்றானில்லை. இவனுக்காக இரங்குவதில் பயனில்லை. விதியை வெல்லவல்லார் யாவர்? ஆகூழால் அனைத்தும் ஆகும்; போகூழால் அனைத்தும் போகும். சிவபெருமானைத் தவிர மற்ற தேவர்களுக்கும் விதிகடந்தற் கரியதே; சிவபெருமான் தந்த ஆயுள் முடிந்து விட்டது. முடிவுகாலம் வந்து விட்டதால் சூர பன்மனும் ஏனைய அவுணரும் இறந்து படுவார்கள். இந்திரன் செய்த நற்றவம் ஒருபோதும் பொய்க்காது. இனி நாம் மறுத் துரைப்பதில் பயனில்லை. பிழைபொறுத்தி யென்பதே தக்கதாம். நமது அண்ணன், அறுமுகவள்ளலின் வேற்படையால் இறப்பது நிச்சயம்; அதனைப் பார்த்து உயிர் வாழ்தல் பொருந்தாத ஒன் றும். ஆதலால், அண்ணனுக்குமுன் நாமும் மாள்வதே தக்கதாம்'' என்று இவ்வாறு சிந்தித்து தந்தைக்கு நிகரான தமயனுடைய தாள்மேல் வீழ்ந்து, "அண்ணா! சினவற்க; அறிவில்லாத அடியே னுடைய பிழையை பொறுத்தருள். சிறியோர் பிழை பொறுத்து ஆட்கொள்வதே பெரியோர் கடனும். அடியேனுடைய பிழையைப் பொறுத்தருள்வது தங்கட்கு கடனேயாம். அளவற்ற எனது குற்

றங்களைப் பொறுத்தருள்வீர். போர்க்களத்திற் சென்று பகைவரை அழிப்பேன். இக்கணமே போருக்கேகுவன்; விடைதருவீர்" என்று கூறினன்.

சூரன் பெரிதும் மகிழ்ந்து, பேரன்புடன் தம்பியை மார்புறத் தழுவி, "அருமைத் தம்பி! நாகலோகத்திலும், பூவுலத்திலும், எண்டிசைகளிலும், விண்ணுலகிலும், அண்டங்களிலும் உனக்கு வெல்லற்கரிது ஒன்றுமில்லை. ஏனைய மிருகங்களை யழிப்பது மிருகேந்திரனுகிய சிங்கமே யன்றோ? சிங்கமுகனுகிய நீ முன் கூறியவெல்லாம் எனது மனத்தையும் வீரத்தையும் சோதிப்பதற்காகவேயாம். எனக்கு நேர்ந்த பகைவரைக் கொன்றேனும் வென்றேனுமன்றி நீ சினந் தணியமாட்டாய். நினது ஆற்றலை நான் நன்குணர்வேன். இன்று நின்னகர் சென்று படைகளைத் திரட்டிக் கொண்டு ஆங்கு ஆயத்தமாக இருப்பாயாக. சிவமைந்தன் இங்கு வரும்போது நின்னை அழைப்பேன்; அப்போது வருவாய். ஒருவேளை முருகன் உனது நகருக்குப் போர்புரிய வருவானுயின் நீ போருக்குப் புறப்பட வேண்டாம். எனக்கு ஒரு தூதன் மூலம் தெரிவித்தாயானல் யான் போர்செய்ய விரைவில் வருவேன்" என்றான்.

சிங்கமுகன் "நன்று" என்று விடைபெற்றுத் தனது ஆசுரம் போய்ச்சேர்ந்தான். சூரபன்மன் அமைச்சர் மைந்தர் முதலியோர்க்கு விடைகொடுத்துவிட்டு தனதிருக்கை சேர்ந்துஇன்புறுவதாயினன். இனி மாலயனுதி வானவர் வணங்க, செந்திலி லமர்ந்தவன் செய்கை செப்புவாம்.

(தொடரும்)

ஓம் குஹாய நம :

கற்பு.

(67 - வது பக்கத் தொடர்ச்சி)

நளாயணி

நளமன்னன் செய்த நற்றவத்தால் வந்த நளாயனி மங்கைப் பருவத்தை யுற்றாள். நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களாகிய நால்வகை சேனையுடனும், கண்ணாகிய வாட் படையுடனும், கூந்தலாகிய மேகநிழலில் அம் மாதரசி நல்லரசு புரிவதானாள். அரசன் அவளை அக்கால வழக்கின்படி கன்னி மாடத்தில் இருத்தினான். நளாயனி தனது தோழிகளாகிய பரி வாரங்களுடன் கன்னிமாடத் திருந்து, சிறந்த கொழுநனை வேண்டி நோன்பிருக்கத் தொடங்கினாள். அவளுடைய அழகின் ஒளியும், புகழின் மணமும் மண்ணுலகிலும், விண்ணுலகிலும் வீசின.

கற்பக நீழலில், இமையவர் இறைஞ்சவும், மாதவர் வாழ்த் தவும், அரம்பையர் ஆடவும், இயக்கியர் யாழ்மீட்டிப் பாடவும் தேவேந்திரன் தனது கொலுமண்டபத்தில் ஒருநாள் கொலுவீற் றிருந்தான். அங்கு நாரதமுனிவர் வந்தனர். அவரைக்கண்ட அமரர் கோமான் எழுந்து எதிர் சென்று இறைஞ்சி இருக்கை ஈந்து துதித்து நின்றான். நாரதர் இந்திரனை இருக்கச் செய்து அவனை வாழ்த்தி, தாம் சென்ற இடங்களிலுள்ள விநோதங்களைக் கூறி, நளாயனியின் நல்லொழுக்கத்தையும், அறிவின் நுட்பத் தையும், தவப் பண்பையும், பேரழகையும், பெருந் தகைமையை யும் எடுத்து வியந்துரைத்து, அவளை யொத்த பெண்கள் மூவுல கிலுமில்லை என்று கூறினார்.

இந்திரன் கேட்டு புன்முறுவல் செய்து "வீணைமுனிவ! தாம் கூறியபடி நளாயனிபால் அழகும் அறிவும் அமைந்திருக்கலாம். அதற்கியைந்த அரிய கற்பின் பண்பு அமைந்திருக்கின்றது என்பதை ஆராய்ந்தே உறுதி செய்யவேண்டும். பேதமை யென்பது மாதர்க் கணிநலமன்றோ? பெண்களின் மனம் உறுதி யற்றது. ஆதலால் நன்றாக ஆராய்ந்தல்லது நிச்சயிக்க முடியாது" என்றான். நாரதர், "புருகூத! அவ்வாறு மொழியற்க. ஆண்களைவிடப் பெண்கள் மனமே விரைவில் கலையாத திண்மை யுடையது. "கற்பென்னுந் திண்மையுடைய பெண்ணிற் பெருந்தக்க யாவுள?" அத்திண்மை நளாயனிபால் நன்கமைந்துளது. அக்குறிப்பு காணும் பொழுதே புலனாகின்றது. வானந்துளங்கினும் மண்கம்பிக்கினும் நளாயனி தன் உறுதியினின்றுஞ் சிறிதும் வழுவாள்" என்றார்.

இந்திரன், "மாதவரே! எத்துணை உறுதி யுடையோரும் பெருந்துன்பமுறும்போது தாங்கொண்ட உறுதியினின்றும் வழுவி விழ்வர் அதிலும் மென்மையையுடைய பெண்பாலராகிய நளாயனி தவறுவளென்பதில் என்ன வியப்பு?" என்றான். நாரதர், "சசிகேள்வ! எத்துணைத் துன்புநேர்கினும் மேன்மக்கள் தமது நிலையினின்றும் அணுவளவும் வழுவார். துன்பம் வரவர புடஞ்செய்த பொன்போல் ஒளிர்வர். பெண்கள் மென்மையுடையர் என்பது உடலை பொறுத்த அளவிலேயே; உள்ளத்தில் வன்மை யுடையோராவர். மேருமலை யசையினும் நளாயனி கற்பின் ஒழுக்கத்தில் சிறிதும் அசைபாள். வேண்டுமேல் நீ சோதித் தறிந்து கொள்" என்றார்.

தேவர் கோமான், "நளாயனியை சோதிக்கும் திறமுடையார் இவ்வவையில் உளரோ?" என்றான்.

ஆயிடை முனிவர் காப்பண அமர்மவுத் கலிய னென்பான்
ஆயவ டன்வன யானே யாய்ந்தறி குவலென் றண்டர்
நாயன்பால் விடைபெற் றெல்லா நலனுமார் நிடத மென்னுந்
தேயமுற் றுயர்மா விந்தத் திருநகர் நண்ணி னானே.

அம்மாப்பேரவைக்கண் மாதவர் குழாத்துளிருந்த மௌத்கல்ய முனிவர் எழுந்து, "தேவர் தலைவ! நளாயனியை சோதிக்

குங் கருத்து நினக்கு உளதேல், அதனை யானே செய்வல்" என்ருர். இந்திரனும் இசைந்து அவருக்கு அக்கருமஞ் செய்ய விடை கொடுத்தனுப்பினன். மௌத்கல்யர் விண்ணுலகை விடுத்து மண்ணுலகை யெய்தி நிடத நாட்டின் தலைநகராகிய மாவிந்த நகரை யடைந்தார்.

மௌத்கல்யர் இளமையிலேயே துறவறத்தை மேற்கொண்டவர்; மாதரை மனத்திலுந் தீண்டாத மாண்புடையவர்; சாகல்யர் என்ற நல்லாசிரியரிடம் முறையே எல்லா நூல்களையும் ஓதியுணர்ந்தவர். தவத்தின் தகைமையால் இந்திரன் மாப் பேரவையில் இனிது வீற்றிருக்கும் பெருஞ் சிறப்பைப் பெற்றவர். இத்தகைய இயல்புடைய அவர் நளமன்னன் கொலுமண்டபத்தில் நுழைந்தார்.

அவரைக் கண்ட நளன் பிரமதேவரை இந்திரன் எதிர் கொள்வதுபோல் எதிர் கொண்டு, அவருடைய திருவடியைத் தனது மணிமகுடத்தால் அலங்கரித்து (வணங்கி), மணித்தவிசு தந்து, பாதங்களை விளக்கி, பனிமலர் தூவித் துதித்து நின்று, "கற்றவர் புகழும் நற்றவரேறே! தங்கள் சேவையால் அடியேன் புனிதனாயினேன்; எனது நாடும் நகரும் நலமுற்றவாயின; யானே தவமுடையேன். தபோதனரே! உமது திருவடித்துகளால் எனது நகர் தூய்மை பெற்றது. இனி யான்பெறும் பேறு மூவுலகினு மில்லை" என்று நல்லுரை நவின்றான்.

மன்னனது வரவேற்பால் மகிழ்வுற்ற மாதவர், மன்னனை வாழ்த்தி,

வறியருக் கிலையெனாது வரையற வழங்கும் வள்ளால்
பொறிபுல னடக்கி னேற்கோர் பொருள்தர வேண்டு மென்ற
அறிவனை நோக்கி வேந்தன் அவாவறு பெரியோய் வேண்டும்
குறியின தேத னைத்தும் நின்னதே கூறு கென்றான்.

"இல்லையென இரப்போர்க்கு இல்லை யென்னாது ஈயும் இறைவ! நின் கொண்டலனைய கொடைத் தன்மையைக் கேட்டு, நின்பால் ஒரு பொருளைவேண்டி வந்தேன்" என்ருர். மன்னன் "விருப்பு வெறுப்பற்ற வித்தகரே! அடியேனுடைய ஆவி ஆக்கை

ஆக்கம் என்பனவெல்லாம் தேவரீருடைய உடைமையே. விரும்பியதை வெளியிட்டுப் பெற்றுக் கொள்ளலாம்'' என்றான். மௌத்கல்யர், "வேந்தே! ஈகை யென்பது நின்பால் இயல்பாக அமைந்துள்ளது. நற்குடிப் பிறந்தார்க்கே உத்தம குணம் அமையும். உனது பெருமையை நேற்று விண்ணுலகில் இந்திர சபையில் ஆன்றோர் பேசக்கேட்டு உவகையுற்றேன். காட்சிக்கு எளியனாய் காண்பார்க்கு இனியனாய், கனியமுத மன்ன கருணைக்கு உறையுளாய், குடிகளுக்கு ஐந்துவகையால் நேரும் துன்பங்களை யகற்றிப், பால் நினைந்தூட்டுந் தாயினும் சாலப் பரிவுடையனாய் விளங்குகின்றனை. நினதுபெருமிதத்தையும்பெருந்திருவையுங்காண வேண்டியே அமரர்கோன் ஆயிரங்கண்களைப் பெற்றனன் போலும். இமையவர் இமையா விழிகளை எய்தினர் போலும். சராசரங்களெல்லாம் நின்னால் தழைத்தோங்குகின்றன. எம்போன்ற இருடியர்க்கும் தவம் நன்கு சித்தியாகின்றது. குறிப்புணர்ந்துதவுங் கொற்றவ! தவம்புரிந்துகொண்டு வனத்தில் வாழும் எனக்கு யாதொன்றின்மீதும் விருப்பமில்லை. யான் ஓடும் பொன்னும் ஒன்றென மதித்த துறவுடையவன். ஆயினும் எனது தவவனத்தில் என் அருகிருந்து தொண்டியற்றுதற்கு ஒரு நங்கை வேண்டும். அதற்குத் தகுதியானவள் நினது தவத்தால் வந்த நளாயனியேயாம். அவளைவிரும்பியே நின்பால் நணுகினேன்'' என்றார்.

முனிவர் மொழியைக்கேட்ட மன்னன், "தபோதனரே! தங்கள் விருப்பத்தை யுணர்ந்தேன். தங்கட்கு பணிவிடை புரிதற்கு எனது சிறுமியே தகுதியுடையாள் என்றமைக்கு மகிழ்கின்றேன். அவளிடம் தங்கட்கு உண்டான அன்புபோல் அவளுக்கும் தங்களிடம் அன்பு உண்டாயினன்றோ அது உயர்வுடையுறவாகும். மனங்கலவாத உறவு வன்பகையினுங் கொடிதன்றோ? தாங்கள் எனது நாடு,நகர், அரசு முதலிய எத்துணை உரிய அஃறிணைப் பொருளாயினும் தடையின்றி தருவேன். உயர்திணைப் பொருளாகிய ஒரு நங்கையை - அவள் வாழ்க்கையை உம்மிடம் ஒப்புவிப்பதென்றால் அவளுடைய விருப்பத்தை யறிந்து செய்வதே முறையாம். மகள் விருப்பமறியாது ஆடு மாடுகளைப்போல் பிறனிடம் தருவது பெரும்

பேதைமையாம். பின் அவள் வாழ்க்கை நலம்பெறுதொழி யினும் ஒழியும். ஆதலால், என் புதல்வியின் கருத்தறிந்து செய்வல்'' என்முன்.

மௌத்கல்யர், ''மன்னர் மன்ன! நினது வாய்மொழி வாய் மையே! என் கருத்து மதுவே. கருத்தொருமித்த வாழ்வே வாழ் வாகும். அவள் என்னை விரும்பினுலன்றி அவளை யான் யேற்றுக் கொள்ள மாட்டேன். ''காதலில்லாக் கலப்பின் சாதல் நன்று'' என்பது உலக வழக்கன்றே? ஆதலால், நான் கன்னிமாடஞ் சென்று நினது செல்வப் புதல்வியைக் காணுதற்கு விடைதருதி'' என்று கேட்டார்.

நளன் அந்த விருத்த வயதுடைய முனிவரைத் தனது மகள் விரும்பமாட்டாளென்றும், இவரை மகள் மறுத்துவிட்டால் தன்மீது முனிவர் முனிவு கொள்வதற்கு இடமில்லை யென்றும், ஆகலால், முனிவரைக் கன்னி மாடத்திற்கே அனுப்பிவிடுவது நல மென்றும் எண்ணி, கன்னிமாடக் காவலர்க்கு அவரை உள்ளே அனுமதிக்கக் கட்டளை ஓலை தந்து அனுப்பினுன். நளா யனிக்கு முனிவர் வரவை மட்டுந் தெரிவிக்கச் செய்தான். அரசன்பால் அனுமதி பெற்ற அருந்தவர் அரசவையை விட்டு புறப்பட்டுக் கன்னிமாடத்தை நாடி வந்தனர். அரசவையிலுள்ள அமைச்சரும் மற்ற மாந்தரும் இம் முனிவனுடைய கருத்தை யுன்னி உள்ளத்தில் முறுவலித்து, ''இக்கிழ முனிவனெங்கே! திருமகள் போன்ற அந்தத் தெய்வக்கன்னி யெங்கே இந்த விபரீத விருப்பம் இவ் விருத்த முனிவருக்கு எவ்வாறு உண்டாகியது? இதனுல் யாதுவிளையுமோ?'' என்று தமக்குள் பேசிக்கொண் டார்கள்.

மௌத்கல்யர் பெண்கள் பேரழகினையே பெரிதும் விரும்புவ ரென்று எண்ணி, தனது வலியால் மன்மதன் கண்டு நாணவும், ஆண்களும் அவாவுறவுமாகிய சிறந்த கட்டழகும் இளமையு முடைய சுந்தர வடிவைக் கொண்டு, கன்னிமாடக் காவல ரிடம் அரசன் அனுமதி யுத்தரவைக் காட்டி உள்ளே புகுந்தார். தாரா கணங்களுக் கிடையில் முழுமதி ஒளிர்வதுபோல் பாங்கிமார்

குழாத்திடை நளாயனி விளங்கிக் கொண்டிருந்தாள். அழகு, அமைதி, அருள், அடக்கம் முதலிய நற்குணங்கள் அனைத்தும் அம் மாதரசிடைச் சூழ்ந்து எழில் செய்துகொண்டிருந்தன. முனிவர் ஒருவர் வருவார் என்ற பிதாவின் கட்டளையைக் கேட்ட அவள், அவரை வரவேற்று வணங்குதற்கான, நன்னீர், நறுமலர்' தூபதீபம் முதலிய பூசைப் பொருள்களுடன் மாதவரை எதிர் பார்த்த வண்ணமாக நின்றாள். சயந்தனைப்போல் எழில் பெற்ற மாமுனிவர் மழகளிறுபோல் பெருமித நடையுடன் நடந்து நளாயனிமுன் நணுகினர். எதிர்பாரததும் இதுகாறும் கண்டறியாததுமாகிய முனிவரது பேரெழிலைக் கண்ட அரசகுமாரி பெரு வியப்புற்று நாணுற்று தலைகவிழ்ந்து நின்றாள். "உருவிழந்த மன்மதன் தவமியற்றி இப் பேரெழிலுருப் பெற்று நமது அரசிளங் குமரியை மணந்துகொள்ள வந்தனனோ" என்று பாங்கியர் ஐயுற்றனர். நளாயனியின் அமைதியான வடிவழகைக் கண்டு முனிவரும் சற்றுமயங்கினர்.

நளாயனி, "இது என்னபுதுமை! முனிவர் வருவரென்றுதானே பிதா செய்தியனுப்பினர்? உருகுமடியவர் இருவினை இருள்பொரு முருகவேளே இங்குற்றனரோ? இந்திரகுமாரனோ? அல்லது இரதிகேள்வனோ? கால் நிலந்தோய்வதால் மனிதராகத்தான் தோன்றுகிறது. எந்தநாட்டு அரசிளங் குமரனோ? எதன் பொருட்டு இங்குற்றனரோ? இன்று நமக்கு ஒரு நன்னாளாக இருக்க வேண்டும். கண்ணுக்கு விருந்து செய்யுங் கட்டழகனைக் காணப்பெற்றோம். இதுகாறும் இல்லாத ஒரு புதுஉணர்ச்சி உண்டாகியிருக்கின்றது. அன்புநீர் ஊற்றெடுத்து ஓடுகின்றது. வந்தவரை உபசரிப்பது நமது கடமையாகும்"

வள்ளிதோள் முயங்குஞான வள்ளலோ மதனன்றானோ
வெள்ளவா ரணன்றன் சேயோ வேந்தர்தம் மகனோ யார்கொல்
உள்ளமுங் கவர்ந்தா னுவனை யுருக்கின னுவகை செய்தான்
தெள்ளமு தனையா னெய்தத் திருத்தவம் பலித்த தென்றாள்

என்றெண்ணி பாங்கியரைப் பார்த்தாள். அக்குறிப்புணர்ந்த பாங்கியர் மணித்தவிசு தந்து அவரை இருக்கச் செய்தனர். நளாயனி மாதவருடைய மலரடிகளை நீரால் விளக்கி பனிமலர் தூவி வணங்கி, ஒரு பொற்றூணருகில் சற்று மறைந்து நின்றாள்.

(தொடரும்)

உ

ஓம் குஹாய நம:

அறிவுள்ள அரசன்

நிலத்தை நான்குவகையாகப் பிரித்தனர் நம் பண்டைப் பெரு மக்கள். அவையாவன குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். (மலை காடு வயல் கடற்கரை) புற்பூண்டின்றி வெறும் மணல் வெளியாய் காண்பதற்குங் கூடாத வெப்பத்துடன் இருக்கும் பகுதிக்குப் பாலை என்று பேர். அப்பாலைவனம் மிகக் கொடுமையாக இருக்கும். அதில் மனிதர் சஞ்சரிப்பது மிகவும் கடுமை. தண்ணீர் என்பது சிறிதுமில்லாத அதில் ஒட்டகம்தான் உலாவுவதற்குக் கூடும். பலநாளைக்கு வேண்டும் தண்ணீரை தண்ணீர் கிடைத்த போது குடித்துக் கொள்ளும் இயல்புடையது ஒட்டகம். ஒட்டகங்களை வைத்துக்கொண்டு சிலர் அங்கு அவ்வழி செல்வோர்க்கு மூட்டைகளையும் ஆளையும் ஏற்றிக் கொண்டு குறித்த இடத்தில் சேர்த்து அவர்கள் தரும் பொருளைக் கொண்டு குடும்பத்தை நடத்துவார்கள்.

முன்னொரு காலத்தில் அப் பாலைவன வழியே ஒரு சிறந்த பட்டுத்துணி வியாபாரி ஒருவன் வந்தான். தனது பட்டுத்துணி மூட்டைகளை ஓர் ஒட்டக மோட்டியினிடம் ஒப்புவித்து பாலைவனந் தாண்டி அடுத்துள்ள நகரத்தில் சேர்ப்பிக்க வேண்டுமென்று அதற்கு ஏற்பட்டுள்ள கூலியைக் கொடுத்தான். ஒட்டக மோட்டி சாமான்களுடன் ஒட்டகத்தை யோட்டிக்கொண்டு புறப்பட்டான். வியாபாரியும் தொடர்ந்து சென்றான். இடைவழியில் அவ்வனத்தின் வெப்பந் தாங்காமல் வியாபாரி உடல் நலங் குன்றித் தங்கி விட்டான். ஒட்டகமோட்டி அவனுடன் தங்காமல் தான் ஒட்டகத்தை விரைவாக ஓட்டிக் கொண்டு குறித்த நகரம்போய், பட்டுத்துணிகளை யெல்லாம் விற்றுநிரம்பப்பணத்தை யுடையவனாகி வேறு வியாபாரஞ் செய்துகொண்டு சீமானாயினான்.

பின் வியாபாரி ஒருவாறு நோய் நீங்கப்பெற்று அந்நகரம் போய் சிறிது உடல் குணப்பட்டபின் ஒட்டக மோட்டியைத் தேடி, அவனிடம் போய் தனது மூட்டைகளைக் கேட்டான், அவன் ஒன்றுமறியாதவனைப்போல் நடித்து, "நான் ஒரு வியாபாரி; ஒட்டக மோட்டியதே கிடையாது; போபோ" என்று அடித்து விரட்டி விட்டான்.

வியாபாரி மனம் நொந்து அந்நகரையாளும் வேந்தனிடம் போய் தனது குறைகளைக் கூறி முறையிட்டான். அரசன் பிரதிவாதியாகிய ஒட்டக மோட்டியை வருவித்து விசாரிக்க, அவன் "நான் ஒன்று மறியேன் நான் ஒரு பெரிய வியாபாரி; ஒட்டக மோட்டியதே இல்லை" என்று சாதித்தான். அரசன் கேட்டு திகைத்து, வியாபாரிக்கு வேறு சாட்சியில்லாமையால் உண்மையைக் காட்டி நியாயத் தீர்ப்பளிக்க முடியாதவனாய், இருவரையும் வெளியே போமாறு விடுத்தனன். அவ்விருவரும் வெளியே புறப்பட்டுப்போய்க் கொண்டிருந்தனர். வியாபாரி மன வருத்தத்துடனும், ஒட்டக மோட்டி தப்பித்துக் கொண்டோமென்ற மகிழ்ச்சியுடன் போய்க்கொண்டிருக்கும்போது அரசன் மாடிமேலேறி "ஓ ஒட்டகமோட்டியே! ஓ ஒட்டகமோட்டியே!" எனக்கூப்பிட்டான். ஒட்டகமோட்டி மட்டிலுந் திரும்பிப் பார்த்தான். அரசன் அவனைக்கூப்பிட்டு "நீ ஒட்டகமோட்டியாக இருந்ததில்லையாயின் இருவரில் நீமட்டுந் திரும்பிப்பார்க்க நியாயமில்லை" என்று கேட்டு அவனைத் தண்டித்து உண்மையையறிந்து, அவன் கைப்பற்றிய பொருள்களின் கிரயத்தைவாங்கி வியாபாரியிடம் தந்து நியாயத்தை நிலை நாட்டினன்

ஓம் குஹாய நம:

சூரவாதித்தன் கதை

திரு ராவ்சாஹிப், வ. சு. செங்கல்வராயப் பிள்ளை, M. A.

(72-வது பக்கத் தொடர்ச்சி)

இன்னுங் கேட்டி! நின்போல் அன்புடையார் காண எஞ்ஞான்றும், காலையில் ரத்னலிங்கமாகத் தோன்றியும், பகலில் ஸ்படிக லிங்கமாகத் திகழ்ந்தும், மாலையில் கனக (பொன்) லிங்கமாகக் கவினுற்றும், முதல் யாமத்து வயிர லிங்கமாகப் பொலிந்தும், நடுயாமத்து எல்லா நிறமும் இலகவும் விளங்குவோம். கற்பு நிறைந்த உனது மனைவியொடு நீ வந்து காண்டி; பின்னர் ஆலயம் ஆதி அமைத்தி - எனத் திருவாய் மலர்ந்தனர். இவ் வசனங்களைக் கேட்ட அரசன் பெருமகிழ்ச்சி எய்தி உளம் பூரித்தான். மற்று அங்கிருந்தார் யாவரும் அற்புதமும் மகிழ்ச்சியும் அடைந்தனர். சோழபிரான் உடனே தன் மனையாள் சிவிகையில் ஏறிவரவும், மற்றையோர் பின்தொடரவும் விரைந்து நடந்து வில்வ வனம் புக்கு, மாலயற் கரிய பெருமான் மன்னி வீற்றிருக்குங் கோலங்கண்டு கைகூப்பித் தாழ்ந் தெழுந்து-

"உற்றார் பிரிதற் கரியானை ஒளிர் ஐவண்ணப் பெரியானைக் கற்றார் கலங்கத் தரியானை" நோக்கி நோக்கிக் களிசிறந்தான். அவன் மனைவி காந்திமதியும் "யானும், என்பதியும், இத்தாரணியும், உய்ந்தன" என்று சொல்லி உள்ளுருகித் தொழுதெழுந்தாள். பின்பு சோழன் காந்திமதி அம்மையை தரிசித்து வணங்கி, "கருணை அன்னாய்! எம்பெருமான் உடன் வந்தனை நீயும்" எனச் சொல்லி அன்பு ததும்பு மனத்தினனாய் மனைவியுடன் பாடினான், பரவினான், பணிந்தான். பின்னர் அங்கிருந்து பிரியா விடை பெற்று மனைவி, அமைச்சர் தற்சூழத் தனது மாளிகைக்கு வந்து சேர்ந்தான். உடனே அரசன் வில்வவனந் தமர்ந்த ஐவண்ணப் பெருமானுக்கும், காந்திமதி யம்மைக்கும் திருக்கோயில் மிக அலங்காரமாக அமைத்தும் திருவிழா பெருஞ் சிறப்புடன் செய்தும் 'வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க, அரசாட்சி செய்து வந்தான். பின்னர், சூரவாதித்தன் காந்திமதி

யிடம் தனக்குப் பிறந்த செல்வனுக்கு முடி-சூட்டி, இவன்னைப் பெருமானது திருக்கோயிலுள் தனது மனைவியுடன் புகுந்து,

"தெளிமனத் தொளியே போற்றி
சிவபுரத் தரசே போற்றி
அளியனுக் கமுதே போற்றி
ஆருயிர்க் குயிரே போற்றி
களியுடைக் கனியே போற்றி
கற்பகத் தருவே போற்றி
வெளிநடத் தவனே போற்றி
வில்வ வனேச போற்றி.
விடையனே காமற் காய்ந்த
விழியனே கங்கை தாங்குஞ்
சடையனே சமனு தைத்த
தாளனே தரக்கின் வன்றோ
லுடையனே அண்டம் யாவும்
உடையநா யகனே சூலப்
படையனே பஞ்சு வர்ணப்
பரமனே போற்றி போற்றி."
வாமமே கலையொண் காந்தி
மதிமண வாள போற்றி
தாமரைச் செங்கண் மாற்கும்
சதுமுகத் தாற்கு மெட்டாக்
காமர்சே வடியாய் போற்றி
கயிலையங் கிரியாய் போற்றி
எமமார் உறந்தை மேய
இறைவனே போற்றி போற்றி.

என்று காத்தழும்ப ஏத்தி, இருகண்களும் நீரருவி சோர நின்று இறைவனது திருவருள் நிரம்பப்பெற்றவனுய்தனதுமனைவியுடன் திருக்கயிலையை அடைந்து தனது * பழைய பதவியை பெற்று ஈறிலாச் சுகமுற்றனன்.

---

* சூரவாதித்தன் திருக்கயிலையில் வாயில் காக்கும் பதவியில் இருந்தவன். காவலிற் சோர்வுபட்ட காரணத்தால் இறைவன் ஆணைப்படி பூமியில் அரசகுமாரனுய்ப் பிறந்து அவர் அருளால் அவர் திருவடிக்கே அன்புபூண்டொழுகும் பேறுபெற்று இறுதியில் தனது பூர்வ பதவியைப் பெற்றான்.